15.04.2025 அ.வ.எண்.358/2023 PW-2

| | |
|---|---|
| பெயர் | முத்துச்சாமி |
| த.பெ. | ராமணகவுண்டர் |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் அனைத்து விவரங்களும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி சிவசாமி எனக்கு என்ன உறவு முறை என்றால் அருகே உள்ளவர், ஒரே ஊர்க்காரர், பங்காளி ஆவார். என் குடியிருப்பு வீட்டிற்கும் வழக்குசொத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும். வாதி சிவசாமி மற்றும் அவரது மனைவி அங்காத்தாள் ஆகியோர் ஒரே வீட்டில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். 23.05.1985ம் தேதி ராமசாமிகவுண்டர், அவிநாசிகவுண்டர் மற்றும் பழனிச்சாமி ஆகியோருக்கு இடையே பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினையில் அவிநாசிக்கவுண்டருக்கும் ராமசாமிக்கவுண்டருக்கும் என்னென்ன பாகங்கள் ஒதுகப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவிநாசிக்கவுண்டருக்கு ஏக்கர் 1.65 சென்ட் ஒதுக்கப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் ராமசாமிகவுண்டருக்கு 2 ஏக்கர் 17 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை 2 ஏக்கர் 23 சென்ட் ஒதுக்கப்பட்டது. அந்த பாகம் பங்கும் போது சொத்தினை உட்பிரிவு செய்து கொண்டார்களா என்றால் அது எனக்கு தெரியாது. 28.02.2013ம் தேதி சிவசாமி தனது மனைவிக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த செட்டில்மென்ட்டில் 2 ஏக்கரா 17 சென்டிற்கு பதிலாக 2 ஏக்கரா 35 சென்ட் என்றும் கிணற்றில் முழுவதும் என்று குறிப்பிட்டு எழுதி கொடுத்துள்ளார் என்றால் தெரியும். அதன் பின் கிணற்றின் பங்கு குறித்து மட்டும் பிழை திருத்தம் செய்து கொண்டார்கள். 2013ம் தேதி அந்த செட்டில்மென்ட் எழுதிகொடுத்துவிட்டு கடந்த 2014ம் வருடம் வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் பின் சிவசாமி தன் மனைவிக்கு எழுதி கொடுத்ததை இரத்து செய்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த போது இந்த சொத்து அவருக்கு உரிமை பாத்தியப்பட்டதாக இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

க.ச. எண். 481/4 காலையில் சிவசாமி பெயரில் தனியாக ஒரு மின் இணைப்பு எண். 439 உள்ளதா என்றால் தற்காலத்தில் தனியாக ஒரு மின் இணைப்பு வாங்கியுள்ளார்கள். பிரதிவாதிகள் மின் இணைப்பு மூலம் கிணற்றில் இருந்து தண்ணீரை வாதி எடுப்பதை தடுக்கவில்லை என்று சொன்னால் தவறு.

**நான் வாதிக்கு நெருங்கிய நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.**

VENKATACHALAM MONIKA

Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2025.04.15 19:52:52 +0530

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.